# தமிழ் மொழியும் இலக்கியமும்

## தரம் 10, 11

## இலக்கியத்தொகுப்பு

**அலகு 01**

**நீதிப்பாடல்கள்**



## வினா விடைத்தொகுப்பு

**கடந்த கால க.பொ.த (சா/த) வினாக்களுடன் ஒப்பிட்டு நோக்கப்பட்டுள்ளது**

தொகுப்பாசிரியர்: செ.ராஜ்குமார்

**"வாளின் கூர்மையை விட நூலின் கூர்மையே உலகை வெல்லும்"**

**No - 15A, Anumar Street, Nochchimunai, Batticaloa T.P 0772926914**

அலகு 01

# நீதிப்பாடல்கள்

- மனித வாழ்க்கையை செம்மைப் படுத்தும், நல் வழிப்படுத்தும் நீதிக் கருத்துக்களை பாடல்களாக கொண்டிருப்பவை நீதிப்பாடல்களாகும்.
- இத்தகைய நீதி பாடல்களை கொண்டமைந்த நீதி நூல்களாக திருக்குறள், நாலடியார், திரிகடுகம், மூதுரை, நல்வழி, இனியவை நாற்பது, விவேகசிந்தாமணி போன்றவற்றை குறிப்பிடலாம்.

## அ. விவேக சிந்தாமணி

- இவ் இலக்கியம் நாயக்கர் காலத்தில் தோன்றியதாக அறியப்படுகின்றது.
- இதன் ஆசிரியர் யாரென இது வரை அறியப்படவில்லை
- பல வகையான சுவை மிக்க பாடல்களை தன்னகத்தே கொண்டமைந்த நூல் இதுவாகும்.
- நாயக்கமன்னன் தமிழ் நாட்டை ஆண்ட போது பல்வேறு சந்தர்ப்பங்களில் பல புலவர்கள் பாடிய பல தனிப்பாடல்களின் தொகுப்பே இந்நூலாகும்.

**சந்தி பிரிக்கப்பட்ட பாடல்**

**தண் தாமரை உடன் பிறந்தும்**
**தண் தேன் நுகரா மண்டுகம்**
**வண்டோ கானகத்து இடையிருந்து**
**வந்து கமல மது உண்ணும்**
**பண்டே பழகி இருந்தாலும்**
**அறியார் புல்லர் நல்லோரைக்**
**கண்டே களித்து அங்கு உறவாடித்**
**தம்மில் கலப்பர் கற்றோரே.**

### அரும்பத விளக்கம்

1. தண் தாமரை - குளிர்ச்சி பொருந்திய தாமரை
2. மண்டுகம் - தவளை
3. தண்தேன் - குளிர்ச்சி பொருந்திய தேன்
4. நுகரா - உண்ணாது
5. கானகம் - காடு
6. கமலம் - தாமரை
7. மது - தேன்
8. புல்லர் - அறிவில்லாதவர்

### பொருள்

தவளையானது குளிர்ச்சி பொருந்திய தாமரையின் உடன் பிறந்திருந்தாலும் அத்தாமரை மலரி லுள்ள குளிர்ச்சியான தேனை உண்ணாது. ஆனால் வண்டோ காட்டில் இருந்து வந்து அம்மலரி லுள்ள தேனை விரும்பி உண்ணும். அது போல நீண்ட நாட்கள் பழகி இருந்தாலும் அறிவில்லாத வர்கள் நல்லவர்களின் உயர்குணங்களை அறியமாட்டார்கள். எனினும் அறிவுடையோர் நல்லவர் களை கண்டதும் அவர்களின் குணங்களை உடனே அறிந்து கொண்டு மகிழ்ச்சியுடன் அவர்க ளுடன் உறவாடி ஒன்று பட்டு கலந்து வாழ்வர்.

### குறு வினாக்கள்

**01. “ தண்டாமரையுடன் பிறந்தும் தண்டேன் நுகரா மண்டுகம்... ( O/L 2020 01.I )**

அ. இங்கு மண்டுகம் என்பதன் கருத்து யாது?
தவளை

ஆ. தண்டாமரை என்பதன் பொருள் யாது,?
குளிர்ச்சி பொருந்திய தாமரை

**02. “ பண்டே பழகி இருந்தாலும் அறியார் புல்லர் நல்லோரை...**

அ. இங்கு புல்லர் எனக் குறிப்பது யாரை?

அறிவற்றவரை /அறிவில்லாதவரை

ஆ. அறிவில்லாதவர் செயல் எவ்வாறு வெளிப்படுகிறது?

நீண்ட காலம் பழகி இருந்தாலும் நல்லவர் குணங்களை அறியமாட்டார்கள்

**03. வண்டோ கானகத்து இடையிருந்து வந்து கமல மது உண்ணும் ..**

அ. கானகம் என்பது குறிக்கும் கருத்து யாது?

காடு

ஆ. கமலம் என்பதன் ஊடாக வெளிப்படும் பொருள் யாது?

தாமரை

**04. இப்பாடலில் அறிவுடையோர், அறிவற்றோர் செயல்கள் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?**

அறிவுடையோர் செயலானது நல்லவர்களை கண்டவுடன் அவர்களின் குணங்களை அல்லது நல்ல இயல்புளை அறிந்து கொண்டு மகிழ்ச்சியுடன் அவர்களிடம் உறவாடி தம்மில் கருத்து ரீதியில் ஒன்றுபடுவர்.

அறிவற்றோர் செயலானது நீண்ட காலம் பழகி இருந்தாலும் நல்லவர்களின் உயர் குணங்களை அவர்கள் அறிந்து கொள்ளமாட்டார்கள். அத்துடன் நல்லவர்களோடு உறவாடவும் மாட்டார்கள்.

**05. இப்பாடலில் இடம்பெற்றுள்ள உவமையணிகளை விளக்குக.?**

அறிவில்லாதவர் செயலானது தவளையின் இயல்புக்கு உவமிக்கப்பட்டுள்ளது

உவமானம் - தவளை

உவமேயம் - அறிவில்லாதவர்

பொதுத்தன்மை – அறியாமை

அறிவுடையவர் செயலானது வண்டின் இயல்புக்கு உவமிக்கப்பட்டுள்ளது.

உவமானம் - வண்டு

உவமேயம் - அறிவுடையவர்

பொதுத்தன்மை – அறிவுடைமை

**06. பாடலில், தவளை, வண்டு என்பவற்றின் இயல்புகள் எவ்வாறு புலப்படுகின்றன?**

தவளை - நீர் நிலையில் தாமரையுடன் ஒன்றாக இருத்தாலும் தாமரையில் உள்ள தேனை அருந்தாது,

வண்டு - காட்டில் இருந்து வந்து தாமரையில் உள்ள தேனை அருந்தும்.

**07. இப்பாடலினூடாக நீதிக்கருத்து எவ்வாறு விளக்கப்பட்டிருக்கின்றது.**

தவளையானது குளிர்ச்சி பொருந்திய தாமரையின் உடன் பிறந்திருந்தாலும் அத்தாமரை மலரிலுள்ள குளிர்ச்சியான தேனை உண்ணாது. ஆனால் வண்டோ காட்டில் இருந்து வந்து அம்மலரிலுள்ள தேனை விரும்பி உண்ணும். அது போல நீண்ட நாட்கள் பழகி இருந்தாலும் அறிவில்லாதவர்கள் நல்லவர்களின் உயர்குணங்களை அறியமாட்டார்கள். எனினும் அறிவுடையோர் நல்லவர்களை கண்டதும் அவர்களின் குணங்களை உடனே அறிந்து கொண்டு மகிழ்ச்சியுடன் அவர்களுடன் உறவாடி ஒன்று பட்டு கலந்து வாழ்வர். இவ்வாறு உவமையணியினை கையாண்டு விளக்கியுள்ளார

## ஆ.வெற்றிவேற்கை

- இந்நூல் நாயக்கர் காலத்தில் வாழ்ந்த அதிவீரராமபாண்டியனால் இயற்றப்பட்டது. இவர் **இலிங்க புராணம், காசிக்காண்டம், நைடதம்** போன்ற நூல்களையும் இயற்றியுள்ளார்.
- இந்நூல் **நறுந்தொகை** எனவும் அழைக்கப்படுகின்றது.
- ஒரு வரி தொடக்கம் 15 வரிப்பாடல்கள் வரை 40 பாடல்கள் உள்ளன

### சந்தி பிரிக்கப்பட்ட பாடல்

**தேம்படு பனையின் திரள் பழத்து ஒரு விதை**
**வான் உற ஓங்கி வளம் பெற வளரினும்**
**ஒருவருக்கு இருக்க நிழல் ஆகாதே**
**தெள்ளிய ஆலின் சிறு பழத்து ஒரு விதை**
**தெள் நீர்க் கயத்து சிறு மீன் சினையிலும்**
**நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை**
**அணிதேர் புரவி ஆள் பெரும் படையொடு**
**மன்னர்க்கு இருக்க நிழல் ஆகுமே**
**அதனால்**
**பெரியோர் எல்லாம் பெரியோரும் அல்லர்**
**சிறியோர் எல்லாம் சிறியோரும் அல்லர்.**

### அரும்பத விளக்கம்

1. தேம்படு - சுவை மிக்க, இனிமை மிக்க
2. திரள் - திரண்ட
3. கயம் - குளம்
4. சினை - முட்டை
5. அண்ணல் யானை - தலைமை மிக்க யானை
5. புரவி - குதிரை

### பொருள்

பனை மரத்தினுடைய சுவைமிக்க திரண்ட பழத்தில் உள்ள ஒரு விதையானது வான் உயர வளம் பெற வளர்ந்திருப்பினும் ஒருவர் தங்கி இருக்க நிழல் தராது. குளத்தில் வாழும் சிறு மீனின் முட்டையை விடவும் ஆலமரத்தின் விதையானது சிறியதே. ஆனாலும் அது முளைத்து பெரிய மரம் ஆன பின் யானை, குதிரை, தேர், ஆட்படை முதலியவற்றோடு மன்னன் தங்கி இருக்க நிழல் தரும். எனவே உடல் அமைப்பில் பெரியோர்போல காட்சியளிப்பவர் அனைவரும் பெரியவர் அல்லர். சிறியவர் போல காட்சியளிப்பவர் உண்மையில் சிறியவரும் அல்லர்.

### குறு வினாக்கள்

**01. “ தேம்படு பனையின் திரள் பழுத்து ஒரு விதை**
**வான் உற ஓங்கி வளம் பெற வளரினும்...**

அ. இங்கு தேம்படு என்பதன் பொருள் யாது?
சுவை மிக்க இனிமை மிக்க

ஆ. வான் உற ஓங்கி வளம் பெற வளரினும்.. என்பதில் வெளிப்படும் அணி?
உயர்வு நவிற்சியணி

**02. “ தெள் நீர்க் கயத்து சிறு மீன் சினையிலும் நுண்ணிதே ஆயினும்…**

அ. இங்கு கயம் என்பது உணர்த்தும் பொருள் யாது?

குளம்

ஆ. சினை என்பதால் நீர் விளங்கிக் கொள்வது?

மீன்சினை

**03. அண்ணல் யானை அணிதேர் புரவி ஆள் பெரும் படையொடு…**

அ. அண்ணல் யானை என்பதன் கருத்து யாது?

தலைமை மிக்க யானை

ஆ. இங்கு வெளிப்படும் நாற்படைகளையும் குறிப்பிடுக? **( O/L 2017 02.I.அ )**

யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை

**04. இப்பாடலில் கூறப்படும் நீதிக்கருத்துக்கள் எவை? ( O/L 2017 02.I.ஆ )**

இப்பாடலில் வெளிப்படும் நீதிக்கருத்துக்களை நோக்கும் போது, உருவத்தில் பெரியவர்கள் எல்லோரும் குணத்தினால் உயர்ந்தவர்கள் அல்லர் உருவத்தில் சிறியவர்கள் எல்லோரும் குணத்தினில் தாழ்ந்தவர்களும் அல்லர் பெரியவர் சிறியவர் என்பது அவர்களிடத்தில் இருந்து பெறப்படும் நன்மையின் அடிப்படையிலையிலயே தீர்மானிக்கப்படும்

**05. பனைமரம், ஆலமரம் என்பவற்றின் இயல்புகளை குறிப்பிடுக?**

**பனைமரம்** - சுவை மிகுந்த பெரிய வித்திலிருந்து வானுயர வளர்ந்திருப்பினும் ஒருவர் இருப்பதற்கு நிழல் தராது.

**ஆலமரம்** - மிகச் சிறிய விதையிலிருந்து முளைத்து வளர்ந்திருப்பினும் யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை ஆகிய நாற்படைகளுடன் அரசன் ஒருவன் தங்கி இளைப்பாறுவதற்கு நிழல் தர வல்லது.

**06. இப்பாடலில் உள்ள உவமை அணியினைக் குறிப்பிடுக?**

பனை மரத்தின் உருவம் பயன் குறைந்தவர்களுக்கு உவமிக்கப்பட்டுள்ளது.

உவமானம் - பெரிய விதையில் இருந்து முளைத்த பனை

உவமேயம் - பயன் குறைந்தவர்கள்

பொதுத்தன்மை – குறைந்த பயன்

ஆல மரத்தின் உருவம் சிறியவர் இயல்புக்கு உவமிக்கப்பட்டுள்ளது.

உவமானம் - சிறிய விதையில் முளைத்த ஆலமரம்

உவமேயம் - பயன் கூடியவர்

பொதுத்தன்மை - கூடிய பயன்

**07. இப்பாடலினூடாக நீதிக்கருத்து எவ்வாறு விளக்கப்பட்டிருக்கின்றது.**

பனை மரத்தினுடைய சுவைமிக்க திரண்ட பழத்தில் உள்ள ஒரு விதையானது வான் உயர வளம் பெற வளர்ந்திருப்பினும் ஒருவர் தங்கி இருக்க நிழல் தராது. குளத்தில் வாழும் சிறு மீனின் முட்டையை விடவும் ஆலமரத்தின் விதையானது சிறியதே. ஆனாலும் அது முளைத்து பெரிய மரம் ஆன பின் யானை, குதிரை, தேர், ஆட்படை முதலியவற்றோடு மன்னன் தங்கி இருக்க நிழல் தரும். எனவே உடல் அமைப்பில் பெரியோர்போல காட்சியளிப்பவர் அனைவரும் பெரியவர் அல்லர். சிறியவர் போல காட்சியளிப்பவர் உண்மையில் சிறியவரும் அல்லர். பெரியவர் சிறியவர் என்பது அவர்களிடத்தில் இருந்து பெறப்படும் நன்மையின் அடிப்படையிலையிலயே தீர்மானிக்கப்படும்.

## இ. வாக்குண்டாம்

- இந் நூல் **சோழர் காலத்து ஔவையாரால்** இயற்றப்பட்டது.
- **மூதுரை** எனவும் அறியப ்படுகின்றது.
- இந் நூலின் கடவுள் வாழ்த்துப் பாடல் வாக்குண்டாம்.. எனத் தொடங்குவதால் இந்நூலுக்கு வக்குண்டாம் எனும் பெயர் வழங்கப்பட்டது. இதில் காப்புச்செய்யுள் தவிர **30 வெண்பாக்கள்** உள்ளன.
- இவர் **ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி** ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

### சந்தி பிரிக்கப்பட்ட பாடல்

**அடக்கம் உடையார் அறிவிலார் என்று எண்ணிக்**
**கடக்கக் கருதவும் வேண்டாம் - மடைத்தலையில்**
**ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும்**
**வாடி இருக்குமாம் கொக்கு.**

### அரும்பத விளக்கம்

1. மடத்தலை - நீர் ஓடும் வாய்க்கால்
2. உறுமீன் -பெரிய மீன்
3. அறிவிலர் - அறிவில்லாதவர்
4. கடக்க - வெல்லுவதற்கு

### பொருள்

கொக்கானது நீர் ஓடும் வாய்க்காலில் சிறிய மீன்களை ஓட விட்டு பெரிய மீனானது வரும் வரைக்கும் காத்திருக்கும். அது போல அடக்கமுடையவர் தமக்கு தகுதியானவர் அல்லது தகுந்த காலம் வரும் வரைக்கும் காத்திருப்பார்களாம். எனவே அடக்கமுடன் இருக்கும் குணமுடையோரை அறிவில்லாதவர் எனக் கருதி அவர்களை வெல்வதற்கு முயற்சிக்க வேண்டாம்.

### குறு வினாக்கள்

**01. “ மடைத்தலையில் ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும்**
**வாடி இருக்குமாம் கொக்கு...** **( O/L 2017 01.III )**

அ. இங்கு மடத்தலை என்பதன் கருத்து யாது?
நீர் ஓடும் வாய்க்கால்

ஆ. கொக்கு யாருக்கு உவமையாக கூறப்பட்டுள்ளது.
அடக்கமுடையாருக்கு

இ. உறுமீன் என்பதன் பொருள் யாது,?
பெரிய மீன்

**02. அடக்கம் உடையார் அறிவிலார் என்று எண்ணிக்**
**கடக்கக் கருதவும் வேண்டாம்..**

அ. கடக்கக் கருத.. எனும் தொடர் தரும் பொருள் யாது?
வெற்றி கொள்ள நினைத்தல்

ஆ. அடக்கமுடையாரை எவ்வாறு கருதக் கூடாது?
அறிவில்லாதவர் என

**03. இப்பாடலில் கூறப்படும் நீதிக் கருத்து யாது ?** **( O/L 2020 02.I )**

இப்பாடலில் வெளிப்படும் நீதிக் கருத்தினை நோக்கும் போது அடக்கமுடை யவர்கள் தமக்கான தகுந்த காலம் வரும் வரைக்கும் காத்திருப்பர். அதாவது கொக்கு பெரிய மீனின் வருகைக்காக காத்திருப்பதைப் போல அடக்கமுடை யாரும் காத்திருப்பார்கள். ஆகவே அவ்வாறு இருப்போரை அறிவில்லாதவர் எனக் கருதி அவர்களை வெல்வதற்கு கருதக்கூடாது எனும் கருத்து புலப்படுத்தப்படுகின்றது.

அதாவது,

**கொக்கு** - சிறிய மீன்களை போக விட்டு பெரிய மீனின் வருகைக்காக காத்திருக்கும்

**அடக்கமுடையவர்** - தமக்கு தகுதியில்லாதவர்களை போக விட்டு தகுதியான எதிரி வரும் வரைக்கும் காத்திருப்பர்

**04. இப் பாடலில், அடக்கமுடையவரின் செயல்/இயல்பு எவ்வாறு காட்டப்படுகின்றது ?**

தமக்கான தகுந்த காலம் வரும் வரைக்கும் அல்லது தமது செயல் ஆற்றுவதற்கு தகுந்த சந்தர்ப்பம் வரும் வரைக்கும் அடக்கத்துடன், பொறுமையுடன் காத்திருப்பார்கள். கொக்கு எவ்வாறு பொறுமையோடு காத்திருக்கின்றதோ அதைப் போ அடக்கமுடையாரும் காத்திருப்பர்.

**05. இங்கு இடம் பெற்றுள்ள அணியினை குறிப்பிட்டு விளக்குக?**

இங்கு உவமையணி இடம் பெற்றுள்ளது.

அடக்கமுடையவர்களின் செயலானது கொக்கின் செயலுக்கு உவமிக்கப்பட்டுள்ளது.

உவமானம் - அடக்கமுடன் காத்திருக்கும் கொக்கு

உவமேயம் - அடக்கமுடையவர்

பொதுத்தன்மை – தக்க சந்தர்ப்பம் வரும்வரை காத்திருத்தல்

**06. கொக்கின் இயல்பு எத்தகையது எனப் பாடலில் கூறப்பட்டுள்ளது?**

நீர் ஓடும் வாய்க்காலில் சிறிய மீன்களை ஓட விட்டு பெரிய மீன் வரும் வரைக்கும் வாட்டமுடன் காத்திருக்கும். அதாவது தன் உணவுக்கு தகுந்த பெரிய மீன் வரும் வரை பொறுமையோடு இருக்கும் என்பதன் ஊடாக கொக்கின் இயல்பு இங்கு காட்டப்படுகின்றது.

## ஈ.திரிகடுகம்

- இந்நூல் **சங்கமருவிய காலத்தில்** தோன்றியது.
- பதினென் கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்றாக விளங்குவது.
- **நல்லாதனாரால்** இது இயற்றப்பட்டது.
- மருத்துவப் பெயரால் அமையப் பெற்ற இந்நூலானது **100 வெண்பாக்களைக்** கொண்டது
- திரி என்பது மூன்று கடுகம் எனப்படுகின்றது இது **சுக்கு, மிளகு, திப்பிலி** என்பவற்றை குறிக்கும். இவை உடல் நலத்தை பேண உதவுகவை. இது போல **வாழ்க்கைக்கு நன்மை தரும் மூன்று நீதிக்கருத்துக்கள** திரிகடுகம் பாடல்களில் இடம்பெற்றிருக்கும். அவை வாழ்க்கையில் உயர்வு பெற உதவுபவை.

### சந்தி பிரிக்கப்பட்ட பாடல்

**கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கு அறுக்கும்**
**மூத்தோரை இல்லா அவைக்களனும் பார்த்து உண்ணும்**
**தன்மை இல்லாளர் அயல் இருப்பும் இம் மூன்றும்**
**நன்மை பயத்தல் இல**

### அரும்பத விளக்கம்

1. கணக்காயர் - ஆசிரியர், ஓதுவிப்பவர்
2. பிணக்கு - மாறுபாடு, முரண்பாடு
3. அவைக்களன் - சபை கூடும் இடம்
4. அயல் இருப்பு - பக்கத்தில் இருத்தல்
5. பயத்தல் - தருவது, கொடுப்பன
6. மூத்தோர் - முதியோர், பெரியோர்

### பொருள்

அறிவு நூல்களைக் கற்றுத் தரும் ஆசிரியர்கள் இல்லாத ஊரும், மனிதர்களிடையே ஏற்படும் முரண்பாடுகளை நீக்கும் அறிவும் அனுபவமும் கொண்ட பெரியோர்களை கொண்டிராத சபையும், மற்றவர்களுக்கு கொடுத்து உண்ணாத குணமுடையவர்கள் அருகில் இருத்தலும், இம் மூன்றும் ஒருவருக்கு நன்மையை தராது.

### வினாக்கள்

**01. " கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கு அறுக்கும்**
**மூத்தோரை இல்லா அவைக்களனும்... ( O/L 2016 01.IX )**

அ. இங்கு கணக்காயர் எனக் குறிப்பது யாரை?
ஆசிரியர்/ஓதுவிப்போர்

ஆ. பிணக்கறுத்தல் என்பது யாது?
பிரச்சனையை தீர்த்து வைத்தல்

**02. …………….பிணக்கு அறுக்கும்**
**மூத்தோரை இல்லா அவைக்களனும்... ( O/L 2019 01.I )**

அ. மூத்தோர் என்போர் யார்?
வயதில் மூத்தவர்கள்

ஆ. அவைக்களன் என்பதன் பொருள் யாது?
பெரியோரை கொண்டிருக்கும் சபை

இ. மூத்தோரிடம் எதிர்பார்க்கப்படும் கடமை யாது?
பிரச்சனையை தீர்த்து வைத்தல்

**03. இப்பாடலினூடாக நீதிக்கருத்து எவ்வாறு விளக்கப்பட்டிருக்கின்றது.**

ஆசிரியர் இல்லாத ஊர், முதியவர்கள் இல்லாத சபை, உணவை பகுத்து உண்ணாதவர் அயல் இருத்தல் என்பன ஒருவனுக்கு நன்மை தருவதில்லை. என்பதனூடாக வாழ்க்கைக்கு இம்மூன்றின் முக்கியத்துவமும் பற்றி விளக்கப்படுகின்றது.

**04. ஒருவர் வாழ்க்கைக்கு நன்மை தராதவை எவை என கூறப்படுகிறது.?**

ஆசிரியர் இல்லாத ஊர்
அறிவும், அனுபவமும் வாய்ந்த மூத்தோர் இல்லாத சபை
உணவை பகிர்ந்து கொடுத்து உண்ணுபவர்கள் இல்லாத அயல்.

# உ. முதுமொழி வெண்பா

- இந்நூல் ஆ.மு.ஷரிபுத்தீன் புலவரால் இயற்றப்பட்டுள்ளது.
- இந் நூலில் உள்ள பாடல்கள் ஒவ்வொன்றிலும் இறுதியில் ஒரு முது மொழியும் ஏனய மூன்று அடிகளிலும் அதற்கு அணி சேர்க்கும் மூன்று விடயங்களும் இருக்கும்
- 04.05.1909 இல் பிறந்து 16.11.2000 இல் மரணித்த இவர் சுவாமி விபுலாநந்தர் அவர்களின் மாணவனாக இருந்து **புதுக்குஷாம்,நபிமொழி நாற்பது, வீராங்கனை சாஹிதா, கனிந்த காதல், சூறாவளி படைப்போர்** போன்ற நூல்களையும் இயற்றியுள்ளார்.

## சந்தி பிரிக்கப்பட்ட பாடல்

**உப்பிலாக் கஞ்சியினை உண்ணும் அறுசுவை போல்**
**தப்பிய கந்தைப் பீதாம்பரம் போல் ஒப்பும்**
**பனையோலைப் பாயில் படுத்து உறங்கும் வாழ்வார்**
**மனம் கொண்டது மாளிகை**

## அரும்பத விளக்கம்

1. தப்பிய - துவைத்த
2. கந்தை - கிழிந்த ஆடை
3. பீதாம்பரம் - பட்டாடை, பொன்னாலான கரையுடைய பட்டாடை
4. ஒப்பும் - ஒப்பானது,

## பொருள்

உப்பில்லாமல் காய்ச்சிய கஞ்சியை அறுசுவை உணவாக கருதி உண்டும், கிழிந்த ஆடையை தோய்த்து பட்டாடையாக கருதி உடுத்தும், அவை போன்றதான பனையோலையால் இழைக் கப்பட்ட பாயில் படுத்து உறங்கியும் மனத்திருப்தியுடன் வாழ்வார்கள். இவர்களுக்கு மனம் கொண்டதே மாளிகையாகும்.

## வினாக்கள்

**01. “ உப்பிலாக் கஞ்சியினை உண்ணும் அறுசுவை போல்**
**தப்பிய கந்தைப் பீதாம்பரம் போல...**

அ. இங்கு உப்பில்லா கஞ்சி எனக் கருதுவது எதனை?
உப்பு இடப்படாத கஞ்சி

ஆ. தப்பிய கந்தை என்பதன் பொருள்?
துவைத்த கிழிந்த ஆடை

இ. பீதாம்பரம் என்பது உணர்த்தும் கருத்து யாது?
பட்டாடை, பொன்னாலான கரையுடைய பட்டாடை

**02. இப்பாடலில் கூறப்படும் முதுமொழி யாது? அதன் பிரதான கருத்து யாது?**
**( O/L 2019 02.I.அ )**

மனம் கொண்டது மாளிகை
ஒருவர்க்கு போதும் எனும் மனநிலையே மன நிறைவைத் தரும். திருப்தியான மனம் கொண்டு வாழ்வோருக்கு அனைத்தும் மன நிறைவைத் தரும்.

**03. இப்பாடலில் மனம் கொண்டதே மாளிகை.. எனும் கருத்து எவ்வாறு எடுத்துக் காட்டப் பட்டுள்ளது? ( O/L 2019 02.I.ஆ )**

பாடலில் பின்வரும் கருத்துக்கள் வாயிலாக மேற்போந்த மனம் கொண்டதே மாளிகை எனும் தன்மை புலப்படுத்தப்படுகின்றது.

உப்பில்லாத கஞ்சியினை அறுசுவை உணவாக கருதி உண்ணுதல்
கிழிந்த ஆடையினை தோய்த்து பட்டாடையாக கருதி அணிதல்
பனையோலையால் பின்னப்பட்ட பாயில் படுத்து உறங்குதல்.

இவற்றின் வாயிலாக இருப்பதை கொண்டு மனநிறைவோடு வாழுதல் எனும் உயரிய பண்பு வெளிப்படுத்தப்படுகின்றது.

**04. மனங் கொண்டது மாளிகை எனும் முதுமொழிக்கு நிகரான பழமொழி யாது?**
போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து.

## ஊ. நாலடியார்

- இந்நூல் சங்கமருவிய காலத்தில் தோற்றம் பெற்றதாகும்.
- **நான்கு அடிகளை** கொண்டு அமையப் பெற்ற **400 பாடல்களைக்** கொண்ட நூல் இதுவாகும். அதனால் இதனை நாலடி நானூறு எனவும் கூறுவர்.
- சமண முனிவர்களால்இயற்றப்பட்ட இந்நூல் திருக்குறளைப்போல் **அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால்** எனும் முப்பெரும் பிரிவுகளுக்குள் 40 அதிகாரங்களை உள்ளடக்கியுள்ளது
- இதனால் திருக்குறளுடன் நெருங்கிய தொடர்புடையதாக இந்நூல் அமைவுறுகின்றது.
- நாலடியாருக்கு உரை எழுதியவர் **பதுமனார்.**

### சந்தி பிரிக்கப்பட்ட பாடல்

**யானை அனையவர் நண்பு ஒரிஇ நாய் அனையார் ( O/L 2018 02.III )**
**கேண்மை தழீஇக் கொளல் வேண்டும் யானை**
**அறிந்து அறிந்தும் பாகனையே கொல்லும்**
**எறிந்த வேல் மெய்யதா வால் குழைக்கும் நாய்**

### அரும்பத விளக்கம்

1. அனையவர் - போன்றவர்
2. நண்புஒரிஇ - நட்பினை விளக்கி
3. கேண்மை - நட்பு
4. தழீஇ - தழுவி
5. மெய்யதா - உடம்பில்

### பொருள்

யானையைப் போன்றவரின் (பழிதீர்க்கும் குணமுடையவரின்) நட்பினை விலக்கி நாயைப் போன்றவரின் நன்றி காட்டும் குணமுடையவரின் நட்பினை தழுவிக் கொள்ள வேண்டும். ஏனென்றால் நீண்ட காலம் பழகியிருந்தாலும் பழியுணர்வு கொண்டு யானையானது பாகனையே கொல்லும். ஆனால் நாயோ தன்னை வளர்ந்தவர் கோபித்து எறிந்த வேல் தன் உடம்பில் தைத்துக்கொண்டு இருக்கும் போதுகூட நன்றியுணர்வுடன் எஜமானைப்பார்த்து வாலை வளைத்து ஆட்டும்.

## வினாக்கள்

**01. “ யானை அனையவர் நண்பு ஒரிஇ நாய் அனையார்**
**கேண்மை தழீஇக் கொளல் வேண்டும்...**

அ. இங்கு நண்பு ஒரீஇ என்பதன் கருத்து யாது?
நட்பினை விலக்கி
ஆ. கேண்மை என்பதன் பொருள் யாது?
நட்பு
இ. எத்தகைய நட்பு சிறந்தது எனக் கூறப்படுகிறது?
நாய் போன்ற நன்றிக்குணமுடையவர் நட்பு
ஈ. எத்தகைய நட்பு விலக்கப்படவேண்டும் எனக் கூறப்படுகிறது?
யானை போன்ற பழியுணர்ச்சியுடையவர் நட்பு

**02. எறிந்த வேல் மெய்யதா வால் குழைக்கும் நாய்..**
அ. மெய்யதா என்பதன் கருத்து யாது?
உடம்பில் தைத்துக்கொண்டு நிற்றல்
ஆ. வால் குழைக்கும் என்பது குறிக்கும் பொருள் யாது?
வால் ஆட்டும்

**03. எத்தகைய நட்பினை தழுவிக் கொள்ள வேண்டும் என நாலடியார் கூறுகிறது? காரணம் யாது?**
**( O/L 2018 02.III.அ )**

நாய் போன்ற நட்பினை தழுவிக் கொள்ள வேண்டும். ஏனெனில் நாயானது, தன் எஜமான் கோபம் கொண்டு எறிந்த வேல் தன் உடம்பில் இருக்கும்படியாகவும் வாலை வளைத்து ஆட்டும். அதாவது நன்றிக் குணத்தை நாய் வெளிப்படுத்தும் இயல்பும், பழிவாங்கும் குணமும் கொண்டிராதது நாயாகும். அத்தகு குணமுடையார் நட்பினை பெறுவது சிறப்பாகும் என்பது நாலடியார் கருத்தாகும்.

**04. நாலடியார் எத்தகைய நட்பினை விலக்க வேண்டும் எனக் கூறுகின்றது? காரணம் யாது?**
**( O/L 2018 02.III.ஆ )**

யானை போன்ற நட்பினை நீக்க வேண்டும். ஏனெனில் யானை, தன்னை வளர்ந்த பாகனையே கோபம் வந்தால் கொன்று விடும் அதாவது பழிவாங்கும் உணர்ச்சி யுடையது. ஆகவே அத்தகைய குணமுடையவர் நட்பினை விலக்கப்பட வேண்டியது அவசியம் என்கின்றது நாலடியார்.

**05. நாயினது இயல்பு பற்றி நாலடியார் யாது கூறுகின்றது.**

நாயானது, தன் எஜமான் கோபம் கொண்டு எறிந்த வேல் தன் உடம்பில் இருக்கும் படியாகவும் வாலை வளைத்து ஆட்டும். அதாவது நன்றிக் குணத்தை நாய் வெளிப்படுத்தும் இயல்பும்,

**06. யானையினது இயல்பு பற்றி நாலடியார் யாது கூறுகின்றது.**

யானை, தன்னை வளர்ந்த பாகனையே கோபம் வந்தால் கொன்று விடும் அதாவது பழிவாங்கும் உணர்ச்சி யுடையது.

**07. இப்பாடலில் இடம்பெற்றுள்ள உவமையணிகளை விளக்குக.?**

1.. பழியுணர்ச்சி கொண்ட மனிதனை பழியுணர்ச்சி கொண்ட யானைக்கு ஒப்பிட்டுக் காட்டியுள்ளனர்
**உவமானம்** - பழியுணர்ச்சி கொண்ட யானை
**உவமேயம்** - பழியுணர்ச்சி கொண்ட மனிதன்
**பொதுத்தன்மை** – பழியுணர்ச்சி

2. நன்றியுணர்ச்சி கொண்ட மனிதனை நன்றியுணர்ச்சி கொண்ட நாய்க்கு ஒப்பிட்டுக் காட்டியுள்ளனர்

**உவமானம்** - நன்றியுணர்ச்சி கொண்ட நாய்
**உவமேயம்** - நன்றியுணர்ச்சி கொண்ட மனிதன்
**பொதுத்தன்மை** - நன்றியுணர்ச்சி

**08. இப்பாடலினூடாக நீதிக்கருத்து எவ்வாறு விளக்கப்பட்டிருக்கின்றது.**

யானையைப் போன்றவரின் (பழிதீர்க்கும் குணமுடையவரின்) நட்பினை விலக்கி நாயைப் போன்றவரின் நன்றி காட்டும் குணமுடையவரின் நட்பினை தழுவிக் கொள்ள வேண்டும். ஏனென்றால் நீண்ட காலம் பழகியிருந்தாலும் பழியுணர்வு கொண்டு யானையானது பாகனையே கொல்லும். ஆனால் நாயோ தன்னை வளர்ந்தவர் கோபித்து எறிந்த வேல்
தன் உடம்பில் தைத்துக்கொண்டு இருக்கும் போதுகூட நன்றியுணர்வுடன் எஜமானைப்பார்த்து வாலை வளைத்து ஆட்டும்.

## எ. இனியவை நாற்பது

- **சங்க மருவிய காலத்தில்** தோன்றிய பதினெண்கீழ்கணக்கு நூல்களில் இதுவும் ஒன்றாகும். **இன்னா நாற்பதுக்கு** மாறுதலாக இது காணப்படுகின்றது.
- **பூதஞ்சேந்தனாரால்** இது இயற்றப்பட்டது.
- வாழ்க்கையின் இனிமையான செயல்கள் பற்றி கூறியிருப்பது இந்நூலாகும்.
- ஒவ்வொரு வெண்பாவிலும் **4 அல்லது 3 இன்பம் தரும் உறுதிப்பொருட்களை** கூறும் **40 வெண்பாக்கள்** இதில் உள்ளன.

### சந்தி பிரிக்கப்பட்ட பாடல்

**கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே
மிக்காரை சேர்தல் மிகமான முன் இனிதே
எள்துணையானும் இரவாது தான் ஈதல்
எத்துணையும் ஆற்றல் இனிது.**

### அரும்பத விளக்கம்

1. மிக்கார் - அறிவில் சிறந்தவர்
2. எள்துணை - மிகச் சிறிது, எவ்வளவும்
3. ஈதல் - கொடுத்தல்
4. இனிது - இனிமையானது

### பொருள்

கற்றவர்கள் முன்னால் தாம் கற்ற கல்வியை எடுத்துரைத்தலும், அறிவில் சிறந்தவருடன் சேர்வதும், எள் அளவும் பிறரிடம் இரவாது (வாங்காது) தான் பிறருக்கு கொடுத்துதவுவதை எந்த நிலையிலும் செய்து வாழ்வது இனிமையானதாகும்.

**01. கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே
மிக்காரை சேர்தல் மிகமான முன் இனிதே..**

அ. யாரின் முன்பாக கல்வி உரைத்தல் இனிமையானது?
கற்றவர்கள் முன்பாக
ஆ.யாரை சேர்ந்திருத்தல் மிகவும் இனிமையானது?
அறிவில் சிறந்தவர்கள்

**02. " எள்துணையானும் இரவாது தான் ஈதல்**
**எத்துணையும் ஆற்றல் இனிது...**

அ. எள்துணையும் என்பதால் கருதப்படுவது யாது?
சிறிதளவும்

ஆ. எத்துணையும் என்பதால் கருதப்படுவது யாது?
எந்தநிலையிலும்/எந்த சந்தர்ப்பத்திலும்

இ. ஈதல் என்பதன் ஒத்த கருத்து யாது?
கொடுத்தல்

**02. ஒருவனுக்கு இனிமை தரும் செயல்கள் எவையென கூறப்படுகிறது?**

கற்றவர் முன்பாக தாம் கற்றி கல்வியை உரைத்தல்
அறிவில் சிறந்த பெரியவர்களுடன் சேருதல்
சிறிதளவும் பிறரிடம் வாங்காது தான், பிறருக்கு கொடுத்துதவுதல்

## கட்டமைப்பு வினா

**01. நீதிப்பாடல்களில் கூறப்பட்டுள்ள அறக்கருத்துக்கள் பற்றி எடுத்துரைக்குக.**

❖ மேன்மக்களின் நற் குணங்களை அறிந்து அவர்களோடு கருத்துக்கள் ரீதியாக உறவாடி பயன்பெற்று வாழ வேண்டும்.
**"தண்டாமரையின் உடன் பிறந்தும்...**

❖ உருவத்தில் பெரியவர்களாக இருப்பவர்கள் பெரியவரும் அல்லர், சிறியவர்களாக இருப்பவர்கள் சிறியவரும் அல்லர். பெரியவர் சிறியவர் என்பது அவர்களிடத்தில் இருந்து பெறப்படும் நன்மையின் அடிப்படையிலையிலயே தீர்மானிக்கப்படும்
**"தேம்படு பனையின் திரள்...**

❖ அடக்கம் உடையவர்கள் தமக்கான தகுந்த நேரம் வரும்வரை காத்திருப்பர். அதனைக் கண்டு அவர்களை அறிவற்றவர்கள் எனக் கருதி அவர்களை வெல்ல நினைக்கக் கூடாது.
**"அடக்கம் உடையார் அறிவிலர்...**

❖ ஆசிரியர் இல்லாத ஊர், பெரியோர் இல்லாத சபை, பகுத்து உண்ணும் பண்பு இல்லாதவர் உள்ள அயலிருப்பு இவை மூன்றும் நன்மை தருவன அல்ல.
**"கணக்காயர் இல்லாத ஊரும்...**

❖ மனத்திருப்தியோடு, மன நிறைவோடு வாழும் வாழ்க்கை மேலானது.
**"உப்பில்லாக் கஞ்சியினை உண்ணு மறு சுவை..**

❖ தீயவர் நட்பினை நீக்கி நல்லவர் நட்பினை பேணிக் கொள்ள வேண்டும்
**"யானை அனையவர் நண்பொரீஇ...**

❖ கற்றவர் முன் கல்வியை உரைத்தல், அறிவுடையவருடன் சேர்தல், சிறிதளவும் பிறரிடம் வாங்காது அவர்களுக்க கொடுத்தல் வேண்டும்.
**"கற்றார் முன் கல்வி உரைத்தல்...**

எனும் அடிப்படையில் விளக்கப்படல் லேண்டும்.

## *கடந்த கால வினாக்கள்*

1. **“ கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கு அறுக்கும்**
**மூத்தோரை இல்லா அவைக்களனும்...** **( O/L 2016 01.IX )**
அ. இங்கு கணக்காயர் எனக் குறிப்பது யாரை?
ஆசிரியர்/ஓதுவிப்போர்
ஆ. பிணக்கறுத்தல் என்பது யாது?
பிரச்சனையை தீர்த்து வைத்தல்

1. **“ மடைத்தலையில் ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும்**
**வாடி இருக்குமாம் கொக்கு...** **( O/L 2017 01.III )**
அ. இங்கு மடத்தலை என்பதன் கருத்து யாது?
நீர் ஓடும் வாய்க்கால்
ஆ. கொக்கு யாருக்கு உவமையாக கூறப்பட்டுள்ளது.

02. **................பிணக்கு அறுக்கும்**
**மூத்தோரை இல்லா அவைக்களனும்...** **( O/L 2019 01.I )**
அ. மூத்தோர் என்போர் யார்?
வயதில் மூத்தவர்கள்
ஆ. அவைக்களன் என்பதன் பொருள் யாது?
பெரியோரை கொண்டிருக்கும் சபை

**“ தேம்படு பனையின் திரள் பழுத்து ஒரு விதை**
**வான் உற ஓங்கி வளம் பெற வளரினும்...**

**03 ஆ. இங்கு வெளிப்படும் நாற்படைகளையும் குறிப்பிடுக?** **( O/L 2017 02.I.அ )**
யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை

**04. இப்பாடலில் கூறப்படும் நீதிக்கருத்துக்கள் எவை?** **( O/L 2017 02.I.ஆ )**
இப்பாடலில் வெளிப்படும் நீதிக்கருத்துக்களை நோக்கும் போது, உருவத்தில் பெரியவர்கள் எல்லோரும் குணத்தினால் உயர்ந்தவர்கள் அல்லர் உருவத்தில் சிறியவர்கள் எல்லோரும் குணத்தினில் தாழ்ந்தவர்களும் அல்லர் பெரியவர் சிறியவர் என்பது அவர்களிடத்தில் இருந்து பெறப்படும் நன்மையின் அடிப்படையிலையிலயே தீர்மானிக்கப்படும்

**“யானை அனையவர் நண்பு ஒரிஇ நாய் அனையார்”** **( O/L 2018 02.III)**

**03. எத்தகைய நட்பினை தழுவிக் கொள்ள வேண்டும் என நாலடியார் கூறுகிறது? காரணம் யாது?**
**( O/L 2018 02.III.அ )**
நாய் போன்ற நட்பினை தழுவிக் கொள்ள வேண்டும். ஏனெனில் நாயானது, தன் எஜமான் கோபம் கொண்டு எறிந்த வேல் தன் உடம்பில் இருக்கும்படியாகவும் வாலை வளைத்து ஆட்டும். அதாவது நன்றிக் குணத்தை நாய் வெளிப்படுத்தும் இயல்பு

**04. நாலடியார் எத்தகைய நட்பினை விலக்க வேண்டும் எனக் கூறுகின்றது? காரணம் யாது?**
**( O/L 2018 02.III.ஆ )**
யானை போன்ற நட்பினை நீக்க வேண்டும். ஏனெனில் யானை, தன்னை வளாத்த பாகனையே கோபம் வந்தால் கொன்று விடும் அதாவது பழிவாங்கும் உணர்ச்சி யுடையது. ஆகவே அத்தகைய குணமுடையவர் நட்பினை விலக்கப்பட வேண்டியது அவசியம் என்கின்றது நாலடியார்.

**உப்பிலாக் கஞ்சியினை உண்ணும் அறுசுவை போல்**
**தப்பிய கந்தைப் பீதாம்பரம் போல் ஒப்பும்**

**02. இப்பாடலில் கூறப்படும் முதுமொழி யாது? அதன் பிரதான கருத்து யாது?**
**( O/L 2019 02.I.அ )**

மனம் கொண்டது மாளிகை
ஒருவர்க்கு போதும் எனும் மனநிலையே மன நிறைவைத் தரும். திருப்தியான மனம் கொண்டு வாழ்வோருக்கு அனைத்தும் மன நிறைவைத் தரும்.

**03. இப்பாடலில் மனம் கொண்டதே மாளிகை.. எனும் கருத்து எவ்வாறு எடுத்துக் காட்டப் பட்டுள்ளது?**
**( O/L 2019 02.I.ஆ )**

பாடலில் பின்வரும் கருத்துக்கள் வாயிலாக மேற்போந்த மனம் கொண்டதே மாளிகை எனும் தன்மை புலப்படுத்தப்படுகின்றது.
உப்பில்லாத கஞ்சியினை அறுசுவை உணவாக கருதி உண்ணுதல்
கிழிந்த ஆடையினை தோய்த்து பட்டாடையாக கருதி அணிதல்
பனையோலையால் பின்னப்பட்ட பாயில் படுத்து உறங்குதல்.
இவற்றின் வாயிலாக இருப்பதை கொண்டு மனநிறைவோடு வாழுதல் எனும் உயரிய பண்பு வெளிப்படுத்தப்படுகின்றது.

**01. “ தண்டாமரையுடன் பிறந்தும் தண்டேன் நுகரா மண்டுகம்... ( O/L 2020 01.I )**
அ. தண்டேன் என்பதை பிரித்து எழுதுக.
தண் + தேன்
ஆ. இங்கு மண்டுகம் என்பதன் கருத்து யாது?
தவளை

**03. இப்பாடலில் கூறப்படும் நீதிக் கருத்து யாது ? ( O/L 2020 02.I அ )**
இப்பாடலில் வெளிப்படும் நீதிக் கருத்தினை நோக்கும் போது அடக்கமுடை யவர்கள் தமக்கான தகுந்த காலம் வரும் வரைக்கும் காத்திருப்பர். அதாவது கொக்கு பெரிய மீனின் வருகைக்காக காத்திருப்பதைப் போல அடக்கமுடை யாரும் காத்திருப்பார்கள். ஆகவே அவ்வாறு இருப்போரை அறிவில்லாதவர் எனக் கருதி அவர்களை வெல்வதற்கு கருதக்கூடாது எனும் கருத்து புலப்படுத்தப்படுகின்றது.
அதாவது,
**கொக்கு** - சிறிய மீன்களை போக விட்டு பெரிய மீனின் வருகைக்காக காத்திருக்கும்

**அடக்கமுடையவர்** - தமக்கு தகுதியில்லாதவர்களை போக விட்டு தகுதியான எதிரி வரும் வரைக்கும் காத்திருப்பர்

**04. புலவர் தான் கூறவந்த கருத்தை புலப்படுத்த கையாண்ட உதாரணத்தை விளக்குக ?**
**( O/L 2020 02.I ஆ )**
தமக்கான தகுந்த காலம் வரும் வரைக்கும் அல்லது தமது செயல் ஆற்றுவதற்கு தகுந்த சந்தர்ப்பம் வரும் வரைக்கும் அடக்கத்துடன், பொறுமையுடன் காத்திருப்பார்கள். கொக்கு எவ்வாறு பொறுமையோடு காத்திருக்கின்றதோ அதைப் போ அடக்கமுடையாரும் காத்திருப்பர்.